**மாவனெல்ல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாவனெல்ல பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியத்தின் இல. 01 இன் 21(உ) பிரிவின் பிரகாரம் உரிய நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுத் தரவுகளுடன் உள்ளபடியான தரவுகளின் ஒப்பீடு அல்லது நிதிக்கூற்றுக்களுடன் பாதீட்டுத் தொகைகள் தனிப்பட்ட நிரலாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்வில்லை.

(ஆ) நியமத்தின் 21(இ) பிரிவின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றக்கூற்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துக்களைக் கணிப்பீடு செய்யும் போது சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,325,000 தொகையான 4 வாகனங்களின் உரித்து கையேற்கப்படாமல் சபையின் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது உரியவாறு இனங்காணப்படாத காணிகளை சுவீகரிப்பதற்கான செலவினத்திற்காக ரூபா 2,000,000 தொகை

கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு ஆண்டின் வருமானத்தில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் வரையான காலத்திற்குரிய முத்திரைக் கட்டண சேகரித்தல்களுக்கான செலுத்த வேண்டிய ரூபா 67,575 தொகையான பதவியணியினர் ஊக்குவிப்புப்படி மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.3.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

சபைக்கு எதிராக மற்றும் சபையினால் தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய நிகழத்தக்க பொறுப்புக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களின் படி 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 94,559,012 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 62,309,184 ஆனமையால் வேறுபாடு ரூபா 32,249,828 ஆகும்.

**1.3.5 பெறவேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 17,450,094 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 602,036 ஆக இருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 570(இ) | 1999 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 378,448 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) குடியரசின் சப்ரகமுவ மாகாணசபையின் நிதி விதிக்கோவை | |
| 261.2.2 விதி | 2000 ஆம் ஆண்டு முதல் 2011 வரை 4 சந்தர்ப்பங்களின் போது 4 உத்தியோகத்தர்கள் பெற்ற ரூபா 90,207 தொகையான செயல் நிமித்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | |
| 5.8 ஆம் பிரிவு | ரூபா 231,786,679 பெறுமதியான சொத்துக்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 மே 29 ஆந் திகதிய 3/2012 ஆம் இலக்க சுற்றறிக்கை | |
| நிபந்தனை இல. 06 மற்றும் 07 | எரிபொருள் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 1,410,000 தொகையான எரிபொருள் படி பிரதேச சபைக்குரிய கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் முற்பணத்தை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (உ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 யூன் 01 ஆந் திகதிய 2005/04 ஆம் இலக்க சுற்றறிக்கை | 1999 ஆம் ஆண்டு முதல் 2013 வரை 27 சந்தர்ப்பங்களின் போது பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 103 ஏக்கர் காணிகளுக்குரிய 27 காணிகளுக்காக சபையின் வருமானக் கட்டுப்பாட்டாளரின் தற்காலிக மதிப்பிட்டின் அடிப்படையில் பெறவேண்டிய 1 சதவீத முற்பணம் பெறப்படாதிருந்ததுடன் உடன்படிக்கை கைச்சாத்திடாமல் விற்பனை செய்யப்பட்ட காணிகளிலிருந்து 10 சதவீத நில அளவும் சபையால் இழக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,881,817 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,169,593 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 14,712,224 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வரி வருமானம் அதிகரித்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | ------------------- | ------------- | ------------- | ------------- |
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 12,945 | 13,075 | 15,713 |
| (ii) | வாடகை | 21,057 | 18,228 | 1,851 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,610 | 1,124 | 153 |
| (iv) | ஏனைய வருமானம் | 67,216 | 55,642 | 49,506 |

### 2.3.2 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

2013 ஆம் ஆண்டின் போது பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பதாதைகளுக்கிடையே உரித்தாளிகளால் அறிவித்தல் வழங்கப்பட்ட பதாதைகளிலிருந்து மாத்திரம் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வருமானக் கட்டுப்பாட்டாளரால் அறிவிக்கப்பட்ட மெய்மையாய்வின் மூலம் அறிவித்தல் பதாதைகள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2012 ஆம் ஆண்டின் போது அறிவித்தல் பதாதைக் கட்டணமாக அறவிடுவதற்கு இருந்த ரூபா 243,043 தொகையினை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 42,631,106 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மாவனெல்ல பிரதேச சபை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக 2008 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடத்தில் அறைகளைப் பிரிப்பதற்காக ரூபா 116,400 தொகையான செலவினம் செலவிடப்பட்டிருந்ததுடன் வாடகை உடன்படிக்கை நிபந்தனையின் படி சபையால் பொருத்தப்பட்ட சகல உபபாகங்களும் சபைக்குச் சொந்தமாக இருந்தமையும் கட்டிடத்தை மீளக் கையளிக்கும் போது அந்த பொருத்திகள் அகற்றப்பட வேண்டியிருந்தமையும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கட்டிடம் மீளக் கையளிக்கப்பட்டு சில வருடங்கள் கடந்த போதிலும் அப்பொருட்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு எதிராக மற்றும் சபையின் முறைப்பாட்டளரால தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் சபைக்காக நீதிமன்றத்தில் சமுகமளிப்பதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அந்த வழக்குகளை விசாரணை செய்யும் சந்தர்ப்பங்களில் சமுகமளிப்பதற்கு கடமை விடுமுறை பெற்று வழக்குத் தவணைக்கு சமுகமளிக்காமையின் காரணமாக சபைக்கு பாதகமான வழக்குத் தீர்ப்பு கிடைத்திருந்தது. கடமையைப் புறக்கணித்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்கும், வழக்கு நடவடிக்கைகளின் போது ஏனைய தரப்பினருக்காக செலுத்துவதற்குள்ள சலுகை மற்றும் சட்டத்தரணிகளுக்காக செலுத்துவதற்கு ஏற்பட்ட கட்டணத்தை கணிப்பீடு செய்து கடமைகளைப் புறக்கணித்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தீர்ப்பு அறிவிக்கப்பட்ட 27 வழக்குக் கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் சகல தகவல்களையும் உள்ளடக்கி நாளதுவரையாக்கப்பட்ட வழக்குப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பான 21 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் 16 தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் சபைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை.

(ஈ) அரசாங்க விடுமுறை தினம் மற்றும் வார இறுதிநாட்களில் கடமைகளுக்காக முன் அங்கீகாரம் பெறவேண்டிய போதிலும் விடுமுறை தினத்தின் பின்னர் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

(உ) மாவனெல்ல வாகனத் தரிப்பிடங்களுக்காக கையேற்கப்பட்ட காணிகளுக்காக இழப்பீட்டுப் பணம் செலுத்தவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் ரூபா 300,339 தொகையான வட்டிக் கொடுப்பனவு மற்றும் 13 வாகனங்களின் வருடாந்த வருமான அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் போது தண்டப் பணமாக ரூபா 11,843 தொகை கொடுப்பனவு தொடர்பாக அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபையின் 10 ஊழியர்களுக்கு 2007 ஆம் ஆண்டு முதல் 2011 இன் இறுதியில் அவர்களுக்கு உரித்தான விடுமுறைகள் முடிவடைந்ததன் பின்னர் பெறப்பட்ட 733 ½ நாட்கள் விடுமுறைப் பதிவேட்டில் சம்பளமற்ற விடுமுறை நிரலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நாட்களுக்காக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது 04 சுகாதாரத் தொழிலாளர்களிடமிருந்து 88 சம்பளமற்ற விடுமுறைகளுக்காக ஒன்றிணைந்த சம்பளத்திலிருந்து மாத்திரம் அறவிடப்பட்ட காரணத்தால் பிரதேச சபை நிதியத்திற்கு ரூபா 35,705 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சி செயற்பாடற்றுக் காணப்பட்ட வங்கிக் கணக்குகளின் பெறுமதி ரூபா 15,694 ஆகும்.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காகச் சமா்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் 06 நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய 130 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 111,837,181 தொகையான நிதி ஏற்பாட்டிற்கிடையே 79 சந்தா்ப்பங்களுக்குரிய ரூபா 97,587,181 தொகை நிதி ஏற்பாடு 100 சதவீதமும், 51 சந்தா்ப்பங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து 50 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையே ரூபா 11,400,680 தொகையும் ஆக ரூபா 108,987,861 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2013 திசெம்பா் 31 ஆந் திகதி வரையில் 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐய வினாக்களுடன் தொடா்புடைய கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பீடு செய்யக்கூடிய பெறுமதி ரூபா 1,763,019 ஆகும்.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடா்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்வது தலைவரின் பணியாக இருந்த போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) கடன்கொடுத்தோா் கட்டுப்பாடு